+ திருஅவை செய்தி

தொகுப்பு VI - பிரதி – 119 / ஜனவரி 29, 2020 (நிறுவிய நாள் - 25/02/201)

அப்போஸ்தலிக்க, கத்தோலிக்க ஆசிரியத்திற்கு கீழ்ப்படிந்திருக்கும்
திருஅவைக்கும், உலகுக்கும் பயன்தரும் வகையில் நற்செய்தி
வாசகர்களாய் பதிவு செய்பவர்களுக்கு இலவசமாய் மின்னஞ்சல் மூலம் பகிரப்படுகிறது

திருத்தந்தை, திருப்பீடம், திருஅவை மற்றும் பொதுவான செய்திகளின் தொகுப்பு
அனைத்துப் புகைப்படங்கள், சித்திரங்கள், பக்கங்கள் படைப்பாக்கப் பொதுமங்கள் (Creative Commons)
வத்திக்கான் செய்திகள் https://www.vaticannews.va/ta/

ஆசிரியர் குழு : மதுரை ஆனந்த், ஆரோக்கியம் டென்னிஸ், சார்லஸ் இருதயம், பிரான்சிஸ் நல்லப்பன் OMI, ஜெயபாலன் ரபேல் SDB, ஜாக்குலின் மேரி SSAM, ஜோமிக்ஸ்,
மரிய அருள் ராஜா S.J., நித்ய சகாயம் OFM, இனிகோ ஜோக்கிம் SSAM மற்றும் K. M. செல்வராஜ்

தொடர்புக்கு : K. M. செல்வராஜ், ஆசிரியர், திருஅவை செய்தி
7/151A, ஹெல்த்கேம்ப், கூடலூர் - 643 211, நீலகிரி மாவட்டம் தமிழ்நாடு
Cell : 9442541471 email : thiruavaiseithi@gmail.com

வாசிக்கலாம் வாங்க . . . . . .

திருத்தந்தை : பரிவன்பின் மறைப்பணிக்கு திருத்தந்தை அழைப்பு - மேரி தெரேசா
மகிழ்வின் மந்திரம்: உழைப்பு, மனித மாண்பின் இன்றியமையாத ஒரு பகுதி - மேரி தெரேசா
திருஅவை : கர்தினால் பரோலின் - காமரூன் நாட்டில் பயணம் - ஜெரோம் லூயிஸ்
இங்கிலாந்தில் 1,00,000 மரணங்கள் – ஆயர்களின் விண்ணப்பம் - ஜெரோம் லூயிஸ்
மறை உரை : அதிகாரத்தின் ஊற்றும் பணியும் அருள்பணி முனைவர் இயேசு கருணாநிதி
உடல் நலம் : ஒவ்வாமையை ஏற்படுத்தும் குளூட்டன் உணவுகள்... யாரெல்லாம் தவிர்க்க வேண்டும்? - ஸ்ரீமதி வெங்கட்ராமன்
புரிதல் : ராகுல் காந்தியுடன் பி.ஜே.பி-யை முட்டி மோத வைக்கும் சாவர்க்கர் யார்? சக்திவேல்
இளைஞர் நலம் : காய்கறி கடையில் தரமான காய் வாங்குவது எப்படி? - சமூக ஊடகம்
நெகிழ்ச்சி : நோயைக் கடந்துவாழும் இறையன்பு - ஜெரோம் லூயிஸ்

திருத்தந்தை : பரிவன்பின் மறைப்பணிக்கு திருத்தந்தை அழைப்பு - மேரி தெரேசா - "நாங்கள் கண்டதையும், கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது" (தி.பணி.4:20) என்ற கூற்றை மையப்படுத்தி, திருத்தந்தை, 95வது உலக

மறைபரப்பு நாள் செய்தியை வெளியிட்டுள்ளார். தங்கள் அழைப்பை, உண்மையான அன்புக் கதையாக அனுபவிக்கும் திறமைபடைத்த இதயங்கள் இயேசுவுக்குத் தேவைப்படுகின்றன என்றும், அத்தகைய இதயங்கள், உலகின் கடையெல்லைவரை சென்று, தூதுரைப்பவர்களாகவும், பரிவன்பின் தூதர்களாகவும் செயல்படுமாறு, அவர் ஊக்கப்படுத்துகிறார் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார். இவ்வாண்டு, அக்டோபர் 3வது ஞாயிறன்று சிறப்பிக்கப்படும் 95வது உலக மறைபரப்பு நாளுக்கென்று, சனவரி 29, இவ்வெள்ளியன்று, செய்தியொன்றை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மறைப்பணிக்கு விடுக்கப்படும் அழைப்பு, கடந்த காலத்தைச் சார்ந்த ஒன்று அல்ல என்றும், இந்த பெருந்தொற்று காலத்திலும் மறைப்பணியாற்ற அழைக்கப்படுகிறோம் என்றும் கூறியுள்ளார்.

திருத்தந்தை விவிலியம் வழங்குகிறார் (ANSA)

நம்மைச் சுற்றிலும், நகரங்களிலும், நம் குடும்பங்களிலும் வாழ்வோரை நினைத்துப் பார்க்குமாறு கேட்டுக்கொண்ட திருத்தந்தை, கோவிட்-19 .பெருந்தொற்று காலத்தில், நம் வட்டத்தை விரிவுபடுத்தி, நம்மைச் சாராதவர்களுக்கும் பணியாற்றுவதில் ஒவ்வொரு நாளும் வளரவேண்டியது மிக முக்கியம் என்று கூறியுள்ளார். திருஅவையில் மறைப்பணியாற்றுவோரின் சான்றுகள் பற்றி நாம் தியானிக்கும்போது, அவர்களின் துணிவால் ஊக்கம்பெறுகிறோம், மற்றும், "அறுவடை மிகுதி; வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுகிறோம்" (லூக்.10:2) என்று, திருத்தந்தையின் செய்தி கூறுகிறது. "நாங்கள் கண்டதையும், கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது" (தி.பணி.4:20) என்று, திருத்தூதர்கள் பேதுருவும் யோவானும் தலைமைச்சங்கத்தின்முன் துணிவோடு கூறிய சொற்களை மையப்படுத்தி, திருத்தந்தை தன் மறைபரப்பு நாள் செய்தியை வெளியிட்டுள்ளார்.

திருத்தூதர்களின் அனுபவங்கள் - ஆண்டவர், ஒவ்வொருவரோடும் நட்போடு

உரையாடி அவர்களை அழைக்க பேரார்வம் கொண்டதிலிருந்து நற்செய்தி அறிவிப்புப்பணியின் வரலாறு ஆரம்பமாகிறது என்றும், இயேசுவை தாங்கள் முதன்முதலில் சந்தித்த நாள் மற்றும், நேரம் பற்றிக்கூட, முதலில் நமக்குக் கூறியவர்கள் திருத்தூதர்கள் என்றும் உரைத்துள்ள திருத்தந்தை, திருத்தூதர்கள் போன்று, காரியங்கள் வித்தியாசமாக இருக்கமுடியும் என்பதை, நாமும், பார்த்திருக்கின்றோம், கேட்டு, அனுபவிக்கின்றோம் என்று கூறினார்.

பெருந்தொற்று முன்வைக்கும் சவால்கள் - பலர் அனுபவிக்கும், வேதனை, தனிமை, வறுமை, மற்றும் அநீதிகளை, கோவிட்-19 பெருந்தொற்று முன்னிலைப்படுத்தி, அவற்றை விரிவுபடுத்தியுள்ளது என்றும், அது, போலியான பாதுகாப்பு உணர்வையும், நம் இயலாமையையும் வெளிப்படுத்தியுள்ளது, இப்பெருந்தொற்றால், நம்மில் பலர் நம்பிக்கையை இழக்கச்செய்யும் எதிர்மறை உணர்வுகளுக்கு உள்ளாகியுள்ளோம், எனினும், நம் சமுதாயங்களில், ஆண்டவர் உயிர்த்துவிட்டார் என்ற நம்பிக்கை செய்தியைக் கேட்கிறோம், இந்த நம்பிக்கையால் தூண்டப்படுகிறவர்கள், துணிவைப் பெறுகின்றனர் என்றும், திருத்தந்தையின் செய்தி உரைக்கின்றது. இக்காலத்தில், நலவாழ்வுக்காக சமுதாய இடைவெளி என்ற பெயரில், புறக்கணிப்பு நியாப்படுத்தப்படுகின்றது, இவ்வேளையில், சந்திப்பு மற்றும், பிறர்மீது அக்கறை கொள்ளத் தேவைப்படும், பரிவன்பின் மறைப்பணி தேவைப்படுகிறது என்றும், இதற்கு, முதல் மறைப்பணி திருத்தூதராகிய அன்னை மரியாவின் பரிந்துரையை மன்றாடுவோம் என்றும், திருத்தந்தையின் 95வது உலக மறைபரப்பு நாள் செய்தி கூறுகின்றது.

மகிழ்வின் மந்திரம்: உழைப்பு, மனித மாண்பின் இன்றியமையாத ஒரு பகுதி - மேரி தெரேசா - மனிதர், நிலத்தில் உழைக்கும் உழைப்பாளராக, இயற்கையின் சக்திகளை பயன்படுத்துபவராக, மற்றும், "உணவுக்காக வருந்தி உழைப்பவராகக்" (தி.பா.127:2) காட்டப்படுகிறார் (அன்பின் மகிழ்வு 23).

புதன் மறைக்கல்வியுரை (AFP or licensors)

இறைவார்த்தையின் ஒளியில் என்ற தலைப்பில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அன்பின் மகிழ்வு (Amoris Latitia) திருத்தூது அறிவுரை மடலின் முதல் பிரிவில், எண் 8 முதல் 22 வரை, குடும்ப அன்பு, தம்பதியர்க்கிடையே நிலவவேண்டிய உண்மையான உறவு, பிள்ளைகளின் முக்கியத்துவம், குடும்பங்களில் சாதாரணமாக காணப்படும் பிரச்சனைகள் போன்றவை, விவிலிய மேற்கோள்களுடன் வழங்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக, முதல் பிரிவில், எண் 23 முதல் 26 வரை, "உங்கள் கரங்களில் உழைப்பு" என்ற தலைப்பில், உழைப்பின் மகத்துவம் விவரிக்கப்பட்டுள்ளது. "உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்! நீர் நற்பேறும் நலமும் பெறுவீர்!" (தி.பா.128:2). இவ்வாறு, திருப்பாடல் 128ன் துவக்கத்தில், ஒரு குடும்பத்தின் தந்தை உழைப்பாளராகத் தோன்றுகிறார். இவர், தன் கரங்களால் உழைத்து, தன் குடும்பத்தின் உடல்நல வாழ்வையும், அமைதியையும் பேணிக் காக்கிறார். உழைப்பு, மனித மாண்பின் இன்றியமையாத ஒரு பகுதி என்பது, திருவிவிலியத்தின் முதல் பக்கங்களில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தொடக்க நூலின் 2ம் பிரிவில் இவ்வாறு வாசிக்கிறோம். "ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்" (தொ.நூ.2:15). மனிதர், பூமியில் உழைக்கும் உழைப்பாளராக, இயற்கையின் சக்திகளை பயன்படுத்துபவராக, மற்றும், "உணவுக்காக வருந்தி உழைப்பவராக"வும், (தி.பா.127:2) அதோடு, தனது சொந்தக் கொடைகளையும், திறமைகளையும், வளர்த்துக்கொள்பவராகவும், காட்டப்படுகிறார். (அன்பின் மகிழ்வு 23). "அன்பின் மகிழ்வு குடும்பம்" என்ற சிறப்பு ஆண்டு, திருஅவையில், 2021ம் ஆண்டு மார்ச் 19ம் தேதி, புனித யோசேப்பு விழாவன்று துவங்குகிறது. அந்த ஆண்டு 2022ம் ஆண்டு ஜூன் 26ம் தேதி வரை சிறப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருஅவை : கர்தினால் பரோலின் - காமரூன் நாட்டில் பயணம் - ஜெரோம் லூயிஸ் - மனித சமுதாயம் சந்தித்துவரும் கோவிட்-19 நெருக்கடியால் ஆப்ரிக்க கண்டம் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதன் எதிரொலியாக, திருத்தந்தையின் அக்கறையைக் காட்டும்வண்ணம் கர்தினால் பரோலின் பயணம்.
சனவரி 28 இவ்வியாழன் முதல், பிப்ரவரி 3, வருகிற புதன் முடிய, திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், ஆஃப்ரிக்க கண்டத்தில் அமைந்துள்ள காமரூன் நாட்டில் ஒரு வார மேய்ப்புப்பணி பயணத்தை மேற்கொண்டுள்ளார்.
தற்போது மனித சமுதாயம் சந்தித்து வரும் கோவிட்-19 நெருக்கடியால் ஆப்ரிக்க கண்டம் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதன் எதிரொலியாக, திருத்தந்தையின் அக்கறையைக் காட்டும்வண்ணம் இந்த பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென திருப்பீடச் செயலகம் அறிவித்துள்ளது.

கர்தினால் பரோலின்

ஆப்ரிக்க கண்டம் இயற்கை வளங்கள் நிறைந்ததாக இருந்தாலும், வெளிநாட்டு, மற்றும் உள்நாட்டு தலையீடுகளால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள ஒரு கண்டம் என்றும், அங்கு ஒப்புரவும், அமைதியும் நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2021ம் ஆண்டின் உலக அமைதி நாளன்று விடுத்த செய்தியை நடைமுறைப்படுத்தும் பயணம் இது என்று கருதப்படுகிறது. இந்த ஒரு வாரப் பயணத்தின்போது, கர்தினால் பரோலின் அவர்கள், காமரூன் ஆயர்களையும், அதிகாரிகளையும் சந்தித்துப் பேசுவார் என்றும், பாமெண்டா (Bamenda) பேராலயத்தில் நிறைவேற்றும் திருப்பலியில், பாமெண்டா உயர் மறைமாவட்டத்தின் பேராயர் Andrew Nkea Fuanya அவர்களுக்கு, பாலியம் வழங்குவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், Yaoundé என்ற ஊரில், தெருவோரக் குழந்தைகள் மற்றும் இளம் கைதிகளுக்கென, இயேசு சபை அருள்பணியாளர் Yves Lescanne அவர்கள் நம்பிக்கையின் இல்லம் என்று பொருள்படும் Foyer de l'Esperance என்ற இல்லத்தை நிறுவியதன் 40ம் ஆண்டு நிறைவு நிகழ்வுகளிலும் கர்தினால் பரோலின் அவர்கள் கலந்துகொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் 1,00,000 மரணங்கள் – ஆயர்களின் விண்ணப்பம் - ஜெரோம் லூயிஸ் - இங்கிலாந்தில் வாழும் மத நம்பிக்கையுடையோர், மற்றும் மத நம்பிக்கை அற்றோர் அனைவரும், பிப்ரவரி 1ம் தேதி முதல், ஒவ்வொரு நாளும், மாலை 6 மணிக்கு ஒரு சில மணித்துளிகள் ஒதுக்கி, செபிக்குமாறு விண்ணப்பம். இங்கிலாந்து நாட்டில் கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக, இறந்தோரின் எண்ணிக்கை 1 இலட்சத்தை தாண்டியுள்ள வேளையில், அந்நாட்டின் கர்தினால், மற்றும், ஆங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த கான்டர்பரி மற்றும் வேல்ஸ் பேராயர்கள், ஆகியோர், மக்களுக்கு விண்ணப்பங்களை விடுத்துள்ளனர்.

பிரித்தானியாவில் கோவிட்-19 தடுப்பூசி (AFP or licensors)

வெஸ்ட்மின்ஸ்டர் பேராயர், கர்தினால் வின்சென்ட் நிக்கோல்ஸ் (Vincent Nichols), கான்டர்பரி பேராயர், ஜஸ்டின் வெல்பி (Justin Welby), வேல்ஸ் பேராயர், ஸ்டீபன் கோட்ரெல் (Stephen Cottrell) ஆகியோர் வெளியிட்டுள்ள விண்ணப்பங்களில், பிரித்தானியாவில் நிலவும் இந்த பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள, மக்கள் ஒன்றிணைந்து இறைவேண்டல் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளனர். கிறிஸ்தவ நம்பிக்கையின்படி, சாவு இறுதியான உண்மை அல்ல, என்பதையும், நமது துயரங்களையும், வேதனைகளையும் நன்கு அறியும் கடவுள், நம் கண்ணீர் அனைத்தையும் துடைத்துவிடுவார் என்பதையும் உணர்ந்து, இறைவேண்டல் புரியுமாறு பேராயர்கள் இம்மடலில் கூறியுள்ளனர். இந்த பெருந்தொற்றினால் வறியோர், முதியோர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் இதுவரை அடைந்துள்ள, இன்றும் அடைந்துவரும் துன்பங்களை நினைவுகூர்ந்து நமது இறைவேண்டல்களும், செயல்பாடுகளும் அமையவேண்டும் என்று பேராயர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். பிரித்தானியாவில் இறந்துள்ள 1 இலட்சம் பேர் என்பது, வெறும் எண்ணிக்கை அல்ல, அவர்கள் அனைவரும் ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் என்பதை வலியுறுத்திக் கூறும் கர்தினால் நிக்கோல்ஸ், பேராயர்கள் வெல்பி, மற்றும் கோட்ரெல் ஆகியோர், இறந்தவர்கள் அனைவரும், இறைவனின் பார்வையில் விலையேறப்பெற்றவர்கள் என்பதையும் எடுத்துரைத்துள்ளனர். இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பகுதிகளில் வாழும் மத நம்பிக்கையுடையோர், மற்றும் மத நம்பிக்கை அற்றோர் அனைவரும், பிப்ரவரி 1ம் தேதி முதல், ஒவ்வொரு நாளும், மாலை 6 மணிக்கு ஒரு சில மணித்துளிகள் ஒதுக்கி, இந்த பெருந்தொற்றின் விளைவுகளை அகற்ற இறைவேண்டல் செய்யுமாறு, பேராயர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ICN)

மறை உரை : அதிகாரத்தின் ஊற்றும் பணியும் அருள்பணி முனைவர் இயேசு கருணாநிதி

31 ஜனவரி 2021 ஆண்டின் பொதுக்காலம் 4ஆம் ஞாயிறு
I. இணைச்சட்டம் 18:15-20
II. 1 கொரிந்தியர் 7:32-35
III. மாற்கு 1:21-28

ஒரு சாதாரண தாள். பத்திரம் எழுதுமிடத்தில் கையெழுத்து வைக்கப்பட்டு, முத்திரை இடப்பட்டவுடன் சொத்து என்று ஆகிவிடுகிறது. ஒரு சாதாரண தாள். ஆளுநரின் கையொப்பம் இருந்தால் அது பணம் என்றாகி விடுகிறது.

முன்பின் தெரியாத இருவர். திருமண நிகழ்வு. மணமகன் மணமகளுக்கு மாங்கல்யம் அல்லது மோதிரம் அணிவிக்க, ஒருவர் மற்றவர்மேல் அதிகாரம் கொண்டவர்களாக மாறுகின்றனர். ஒருவர் மற்றவர்மேல் உரிமை கொண்டுகின்றனர்.

எளிய பின்புலத்திலிருந்து வரும் ஒருவர். அருள்பணியாளராக அருள்பொழிவு பெற்றவுடன் அவர் தன் ஆயருக்குக் கீழ் மறைமாவட்டத்தின் பங்கு அல்லது நிறுவனத்தில் அதிகாரம் பெற்றவராக மாறுகின்றார்.

பேருந்து ஓட்டுநருக்கு பேருந்தின் மேல் அதிகாரம். நடத்துனருக்குப் பயணிகள் மேல் அதிகாரம். மருத்துவ மனையில் மருத்துவருக்கு நோயுற்றவர்கள்மேல் அதிகாரம். நாட்டின் தலைவருக்கு அந்நாட்டு மக்கள்மேல் அதிகாரம் என எல்லா நிலைகளிலும் அதிகாரத்தின் இருப்பும் இயக்கமும் இருப்பதை நாம் காண்கிறோம்.

சில அதிகாரங்களைக் கண்டு நாம் அஞ்சுகின்றோம்.
சில அதிகாரங்களை நாம் வெறுக்கிறோம்.
சில அதிகாரங்களை நாம் விரும்பி ஏற்றுக்கொள்கிறோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், இயேசு அதிகாரத்தோடு போதிக்கின்றார், அதிகாரத்தோடு தீய ஆவிகளுக்குக் கட்டளை இடுகின்றார். இவை இரண்டையும்

கேட்கின்ற, காண்கின்ற மக்கள் திரள் வியக்கிறது. தீய ஆவி தொழுகைக்கூடத்தில் இருக்கிறது. 'நீர் யாரென்று எனக்குத் தெரியும்' என்று இயேசுவை நோக்கிச் சொல்வதோடு, 'உமக்கு இங்கு என்ன வேலை?' என்று கேட்கிறது. உண்மையில், 'உனக்கு இங்கு என்ன வேலை?' என்று இயேசுதான் தீய ஆவியிடம் கேட்டிருக்க வேண்டும். மக்கள் கூடி இறைவேண்டல் செய்யும் இடத்தில் தீய ஆவி எப்படி வந்தது? மக்கள் வாரந்தோறும் தொழுகைக்கூடத்திற்கு வந்தார்களோ இல்லையா, தீய ஆவி ரெகுலராக வந்தது. தீய ஆவி வந்து செல்லும் அளவுக்குத்தான் தொழுகைக்கூடத்தின் இயக்கம் இருந்தது என்று எண்ணத் தோன்றுகிறது. தீய ஆவிக்கு தொழுகைக்கூடம் பிடித்திருந்தது.

தீய ஆவியின் அதிகாரத்திற்குள் இருந்த ஒரு நபரை இயேசு விடுவிக்கின்றார். ஆக, உண்மையான அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்பது இந்த நிகழ்வின் வழியாகத் தெளிவாகிறது. இஸ்ரயேல் மக்கள் அதிகாரத்தை இரண்டு நிலைகளில் பார்த்தனர்: ஒன்று, மக்களால் மக்களுக்காக உருவாக்கப்படும் அதிகாரம். குறிப்பாக, ஒரு குடும்பத்தில் பெற்றோர் தங்கள் குழந்தைகள்மேல் கொண்டுள்ள அதிகாரம், ஓர் அரசன் தன் மக்கள்மேல் கொண்டிருந்த அதிகாரம், மறைநூல் அறிஞர்கள் தங்கள் விளக்கங்களை வழங்கத் தாங்கள் சார்ந்திருந்த பள்ளியின் வழியாகப் பெற்ற அதிகாரம், ஆலயத்தில் குருக்கள் பெற்றிருந்த அதிகாரம் போன்றவை. இது காலத்திற்கும் இடத்திற்கும் உட்பட்டது. காலத்தையும் இடத்தையும் தாண்டி ஒருவர் அதிகாரம் செலுத்த முடியாது. எடுத்துக்காட்டாக, நான் பெற்றோர் என்பதற்காக எனக்கு அடுத்திருக்கும் வீட்டில் உள்ள குழந்தையின்மேல் அதிகாரம் செலுத்த முடியாது. இரண்டு, இறைவன் அல்லது கடவுள் மக்களுக்கு வழங்கும் அதிகாரம். இது பற்றிய கேள்வியை இயேசு பரிசேயர்களிடம் கேட்கின்றார்: 'திருமுழுக்கு யோவானுக்கு, திருமுழுக்கு கொடுக்கும் அதிகாரம் எங்கிருந்து வந்தது? மண்ணிலிருந்தா? விண்ணிலிருந்தா?' இயேசுவின் இந்தக் கேள்விக்கு அவர்கள் பதிலிறுக்க மறுக்கின்றனர். மேலும், இயேசுவின் பணிக்காலம் முழுவதும், அவருடைய எதிரிகள், 'பாவங்களை மன்னிக்க இவர் யார்?' 'நீர் எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்கின்றீர்?' என அவரிடம் நிறையக் கேள்விகள் கேட்கின்றனர். தன் பாடுகளுக்கு முன் இயேசு விசாரிக்கப்படும் நிகழ்வில்கூட, 'உன்னை விடுதலை செய்யவும் எனக்கு அதிகாரம் உண்டு, உன்னைச் சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரம் உண்டு என்பது உனக்குத் தெரியாதா?' எனப் பிலாத்து இயேசுவிடம் கேட்க, இயேசு, 'மேலிருந்து அருளப்படாவிடில் உமக்கு என்மேல் எந்த அதிகாரமும் இராது' என்கிறார் (காண். யோவா 19:10-11).

மேலிருந்து வரும் அதிகாரம் அல்லது இறைவன் தரும் அதிகாரம் என்றால் என்ன?

இதைப் புரிந்துகொள்ள இன்றைய முதல் வாசகம் (காண். இச 18:15-20) உதவுகிறது. இஸ்ரயேல் மக்கள் பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டுக்குள் நுழையுமுன் அவர்களோடு உரையாற்றும் மோசே, 'உன் கடவுளாகிய ஆண்டவர் உன் சகோதரர் நடுவினின்று என்னைப் போல் ஓர் இறைவாக்கினரை ஏற்படுத்துவார்' என்கிறார். இந்த இறைவாக்கினர் யார்? என்ற கேள்வி யூத இலக்கியங்கள் பலவற்றில் எழுகின்றது. அதிகமான இலக்கியங்கள், 'பொதுவான இறைவாக்கினர் பற்றிய பதிவு இது' என்றும், சில, 'இது இறைவாக்கினர் எரேமி யாவைக் குறிக்கிறது' என்றும் சொல்கின்றனர். ஆனால், நற்செய்தியாளர்களைப் பொருத்தவரையில், 'இது இயேசுவையே குறிக்கிறது.' ஏனெனில், இந்த இறைவாக்கினர் பெற்றிருக்கும் மூன்று பண்புகளை இயேசு பெற்றிருக்கின்றார்.

அவை எவை?

(அ) ஆண்டவர் தாமே அந்த இறைவாக்கினரை மக்கள் நடுவினின்று ஏற்படுத்துவார்

(ஆ) ஆண்டவர் தம் வார்த்தைகளை அவருடைய வாயில் வைப்பார்.

(இ) ஆண்டவர் கட்டளையிடுவது அனைத்தையும் அந்த இறைவாக்கினர் பேசுவார்.

ஆக, இறைவாக்கினர் என்பவர் வரவிருப்பவற்றை முன்குறித்துச் சொல்லும் குறிசொல்பவர் அல்லது சோதிடக் காரர் என்ற நிலை மாறி, அவர்கள் மக்கள் முன் இறைவன் சார்பாகவும், இறைவன் முன் மக்கள் சார்பாகவும் பேசுபவர் என்ற புரிதல் உருவாகிறது. அந்த நிலையில் இயேசுவின் இறையாட்சிப் பணி என்பது ஓர் இறை வாக்கினர் பணியாக இருக்கிறது. ஆண்டவரின் வார்த்தைகளை அறிவிக்கின்றார், வல்ல செயல்கள் செய்கின்றார்.

இயேசு இரண்டு நிலைகளில் தனக்கு முந்தைய இறைவாக்கினர்கள் மற்றும் தன் சமகாலத்து மறைநூல் அறிஞர்களைவிட மேன்மையானவராக இருக்கிறார்:

(அ) மற்ற இறைவாக்கினர்கள் எல்லாம் இறைவாக்குரைக்கும்போது, 'ஆண்டவர் கூறுகிறார்' என ஆண்டவரின் அதிகாரத்தின்கீழ் இறைவாக்கு உரைத்தனர். ஆனால், இயேசுவோ, 'நான் உனக்குச் சொல்கிறேன். எழுந்து நட!' என்று தன் வார்த்தைகளின் அதிகாரத்தை தனக்குள்ளே கொண்டிருக்கின்றார்.

(ஆ) மற்ற மறைநூல் அறிஞர்கள் மறைநூல் பகுதிகளை விளக்கிச் சொல்லும்போது, தங்களுடைய விளக்க வுரைகளை தங்களுக்கு முன்சென்ற மறைநூல் அறிஞர்கள் மற்றும் தாங்கள் சார்ந்திருந்த பள்ளிகளின் கருத்துகளை ஒட்டி விளக்கம் தந்தனர். எடுத்துக்காட்டாக, ஒரு ரபி இன்னொரு ரபியின் விளக்கத்தை ஒட்டியே தன் விளக்கத்தையும் அளிப்பார். ஆனால் இயேசு, தொழுகைக்கூடத்தில் எசாயாவின் இறைவாக்குப் பகுதியை வாசித்தவுடன், அதற்கு விளக்கம் தருவதற்குப் பதிலா, 'நீங்கள் கேட்ட இந்த இறைவாக்கு இன்று நிறைவேறிற்று!' என்கிறார் (காண். லூக் 4). தானே இறைவாக்கு நூல்களின் நிறைவு எனத் தன்னை முன்மொழிகிறார் இயேசு.

இந்த இரண்டும் இன்றைய நற்செய்தி வாசகத்திலும் நடந்தேறுகிறது. முதலில், இயேசு அதிகாரம் கொண்டவராகப் போதிக்கின்றார். இரண்டு, தீய ஆவி மேல் அதிகாரம் கொண்டு தீய ஆவியைத் தன் சொல்லால், தன் அதிகாரத்தால் விரட்டுகின்றார்.

இந்தப் பின்புலத்தில்தான், எம்மாவு சீடர்கள் எருசலேமிலிருந்து வழிநடந்தபோது, தங்களோடு மறைவாக வழிநடந்த இயேசுவிடம், 'நாசரேத்து இயேசுவைப் பற்றியேதான் பேசுகிறோம். அவர் கடவுளுக்கும் மக்கள் எல்லாருக்கும் முன்பாகச் சொல்லிலும் செயலிலும் வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார்' (காண். லூக் 24:19) எனப் பதிவு செய்கின்றார். மாற்கு நற்செய்தியில், இயேசு தன் முதற்சீடர்களை அழைத்த பின்னர், பதிவு செய்யப்படும் முதல் நிகழ்வே அவருடைய போதனை மற்றும் வல்ல செயலின் இயல்பை எடுத்துரைப்பதாக இருக்கின்றது. இவ்வாறாக, மாற்கு, மக்களும் தீய ஆவிகளும் இயேசுவின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டதாகப் பதிவு செய்கின்றார்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் (காண். 1 கொரி 7:32-35), மணத்துறவு பற்றித் தொடர்ந்து பேசுகின்றார் பவுல். திருமண உறவில் கணவன் மனைவி மேலும், மனைவி கணவன் மேலும் கொண்டிருக்கும் அதிகாரத்தில் உரிமை இருப்பதோடு, கவலையும் இருப்பதாகச் சொல்கின்றார் பவுல். ஏனெனில், அங்கே ஒருவர் அடுத்திருப் பவருக்கு உகந்ததைச் செய்யும்போதே அங்கே அதிகாரம் கிடைக்கிறது. எடுத்துக்காட்டாக,

கணவர் தன் மனைவிமேல் அதிகாரம் கொள்ள வேண்டுமெனில், அவருக்கு உகந்ததைச் செய்ய வேண்டும். பல நேரங்களில் அடுத்தவருக்கு உகந்தது என்று அறிந்துகொள்வதே பெரிய போராட்டமாக அங்கு இருக்கிறது. ஆனால், மணமாகாதவர் ஆண்டவருக்கு உகந்ததை நிறைவேற்றுவதால் அவர் ஆண்டவரிடம் பற்றுக்கொண்டிருக்கிறார். ஆண்டவரின் பொருட்டு தன் அதிகாரத்தை இழக்க முன் வருகின்றார்.

ஆக, முதல் வாசகத்தில், மோசே, இறைவாக்கினரின் அதிகாரம் இறைவனில் ஊற்றெடுக்கிறது என முன் மொழிகிறார். நற்செய்தி வாசகத்தில், இயேசு, இறைவனின் மகனாக, தானே அதிகாரத்தைக் கொண்டிருக் கிறார். அந்த அதிகாரம் அவருடைய போதனை மற்றும் வல்ல செயலில் வெளிப்படுகிறது. இரண்டாம் வாசகத்தில், மணவுறவின் அதிகாரத்தையும் தாண்டி, மணத்துறவின் அதிகாரம் ஒருவரைக் கவலையின்றி இருக்கவும், ஆண்டவர்மேல் பற்றுக்கொண்டிருக்கவும் செய்கிறது என்கிறார் பவுல்.

அதிகாரம் இன்று எல்லா நிலைகளிலும் மேலோங்கி நிற்கிறது. அதிகாரம் பல நேரங்களில் வன்முறையால் பிறழ்வுபடுகிறது. அல்லது அதிகாரம் சில நேரங்களில் வலுவற்றவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்டு, வலுவற்றவர்களை இன்னும் நொறுக்குகிறது. நாம் எந்த நிலையில் இருந்தாலும் நமக்கென்று ஓர் அதிகாரம் இருக்கவே செய்கிறது. ஒரு குழந்தையும் கூட தான் வைத்திருக்கும் தன் பொம்மையின்மேல் தன் அதிகாரத்தைக் காட்ட விழைகிறது.

இன்று நம் அதிகாரத்தின் ஊற்றும் பணியும் எப்படி இருக்க வேண்டும்?

(அ) இறை மைய அதிகாரம்

இறைவன் ஒருவரே நம் அதிகாரத்தின் ஊற்று என எண்ண வேண்டும். இப்படி எண்ணுவதால் நம் அதிகாரத்தின் வரையறையை நாம் உணர்ந்துகொள்ள முடியும். இறைவன் எனக்கு அளிக்கும் அதிகாரம் நான் நன்மை - தீமையைத் தெரிவு செய்யப் பயன்படுகிறது. அந்த அடிப்படை அதிகாரத்தையே நான் தவறாகப் பயன்படுத்தினேன் என்றால், மற்ற அதிகாரத்தையும் நான் தவறாகவே பயன்படுத்துவேன். நான் எந்த நிலையில் அதிகாரம் கொண்டிருந்தாலும் என் அதிகாரத்தின் ஊற்று இறைவன் என்று இருக்க வேண்டும். புனித பவுல் அப்படி நினைத்ததால்தான், மணத்துறவு பற்றிய அறிவுரையை அவரால் வழங்க இயலுகிறது.

(ஆ) அதிகாரம் பணி செய்வதற்கே

இயேசுவின் அதிகாரம் போதிப்பதிலும், வல்ல செயல் செய்வதிலும் வெளிப்படுகிறது. ஆக, சொல்லும் செயலும் ஒருவரின் அதிகாரத்திலிருந்து புறப்படுகின்றன. அப்படிப் புறப்படும் சொல்லும் செயலும் மற்றவருக்கு நன்மை செய்ய வேண்டுமே அன்றி, ஒருபோதும் தீமை செய்தல் கூடாது. இன்று, அதிகாரப் பிறழ்வுகள் சொல் மற்றும் செயல் என்னும் இரண்டு நிலைகளில்தாம் நடந்தேறுகின்றன. அடுத்தவர் வாழ்வு பெறுகிறார் என்பதோடு, அங்கே நாமும் வாழ்வு பெற வேண்டும். என் அதிகாரத்தால் தீமை அகல வேண்டும்.

(இ) ஆண்டவருக்கு உகந்தது

ஆண்டவருக்கு உகந்ததை நாடுபவர்கள் கவலையின்றி இருப்பார்கள் எனச் சொல்கிறார் பவுல். ஒருவர் தன் அதிகாரத்தின் ஊற்று இறைவன் என்பதை

உணர்ந்தால், அவர் மற்றவருக்குத் தன் சொல்லாலும் செயலாலும் நன்மைகள் செய்தால் அவர் ஆண்டவருக்கு உகந்ததையே செய்கின்றார். ஆக, வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும், எனக்கு உகந்ததை நாடாது, ஆண்டவருக்கு உகந்ததை நாட நான் முயற்சி செய்ய வேண்டும். பல நேரங்களில் எனக்கு உகந்தது எது என்பதை அறிந்துகொள்ளவே எனக்குக் குழப்பமாக இருக்க, ஆண்டவருக்கு உகந்ததை நான் எப்படிக் கண்டறிவது என்ற கேள்வி எழலாம்? ரொம்ப எளிதான விடயம். எனக்கு உகந்ததை நான் செய்யும்போது அங்கே கவலை பிறக்கிறது. ஆண்டவருக்கு உரியதை நான் செய்யும் போது கவலைகள் அகல்கின்றன. இதுவே அளவுகோல்.

அருள்திரு. யேசு கருணாநிதி, மதுரை உயர்மறைமாவட்டம், இணைப் பேராசிரியர், புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகம்,
திருச்சிராப்பள்ளி 620 001, அழைக்க 948 948 21 21, மின்னஞ்சல் : yesu@live.in

உடல் நலம் : ஒவ்வாமையை ஏற்படுத்தும் குளூட்டன் உணவுகள்... யாரெல்லாம் தவிர்க்க வேண்டும்? - ஸ்ரீமதி வெங்கட்ராமன் (விகடன்)

Gluten foods

குளூட்டன் ஃப்ரீ டயட் சமீப காலமாக மிகவும் பிரபலமாகியுள்ளது. குளூட்டனை எல்லோரும் தவிர்க்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் `சீலியாக்' (celiac) எனப்படும் நோய் உள்ளவர்கள் அவசியம் குளூட்டன் ஃப்ரீ உணவுகளையே உட்கொள்ள வேண்டும்.

எப்போதும் இல்லாத அளவுக்கு உணவு பற்றிய விழிப்புணர்வு கடந்த சில மாதங்களில்

மிகவும் அதிகமாகி உள்ளது. குறிப்பாக, இந்தக் கொரோனா காலத்தில் மக்களின் கவனம் சிறந்த சத்தான, மருத்துவ குணமுள்ள உணவுமுறையைக் கடைப்பிடிப்பது மற்றும் நோயற்ற வாழ்வு பக்கம் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது.

உணவே மருந்து என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால், பலருக்கு சில வகை உணவுகள் ஒவ்வாமையாக மாறிவிடுகிறது. அவற்றில் ஒன்றுதான் குளுட்டன் கலந்த உணவுகள்.

குளுட்டன் என்பது ஒரு வகை புரதம். பசைத்தன்மை நிறைந்தது. கோதுமை, பார்லி போன்ற தானிய வகைகளில் இந்த குளுட்டன் அதிகம் காணப்படுகிறது. ஒட்டும் தன்மை, நெகிழ்வுத் தன்மை மற்றும் மெல்ல எளிதான தன்மை போன்றவை குளுட்டன் உணவுகளின் இயல்புகள். இதனால் இதை பிரட், பிஸ்கட், ரஸ்க், பேக்கரி உணவு வகைகளில் அதிகம் பயன்படுத்துகிறார்கள்.

குளுட்டன் ஃப்ரீ டயட் சமீப காலமாக மிகவும் பிரபலமாகியுள்ளது. குளுட்டனை எல்லோரும் தவிர்க்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் `சீலியாக்' (celiac) எனப்படும் நோய் உள்ளவர்கள் அவசியம் குளுட்டன் ஃப்ரீ உணவுகளையே உட்கொள்ள வேண்டும்.

வயதான சிலருக்கு மட்டுமே இந்தப் புரதத்தை ஜீரணிக்க சகிப்புத் தன்மை இல்லாமல் இருக்கும். அவர்கள் மட்டுமே குளுட்டன் ஃப்ரீ உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இவர்களுக்கு குளுட்டன் உள்ள உணவுகளான சப்பாத்தி , பிரட், ரவை அல்லது சேமியா உண்ணும்போது வயிற்றுவலி, அடிக்கடி மலம் கழிப்பது, நாள்பட்ட வயிற்றுப்போக்கு, அதீத சோர்வு, மலச்சிக்கல், போன்ற அறிகுறிகள் தெரிந்தால் அவர்கள் `உணவு சகிப்புத் தன்மை டெஸ்ட்' (உணவு இன்டாலரன்ஸ்) செயதுகொள்ள வேண்டும். அவர்கள் குறிப்பிட்ட அந்த உணவுகளைத் தவிர்க்கலாம்.

உடல் எடையைக் குறைக்க பலரும் இந்த குளுட்டன் ஃப்ரீ உணவுமுறையைப் பின்பற்றுகிறார்கள். இதற்குப் போதுமான மருத்துவ ஆதாரங்கள் இல்லை. பேலன்ஸ்டு டயட் எனப்படும் சமச்சீர் உணவு வகைகளை நம் அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நம் உடலுக்கு எல்லா சத்துகளும் கிடைக்கும்.

நம் அன்றாட வேலைகளைச் செய்ய உடல் சார்ந்த சக்தியை மட்டும் அல்லாமல் நம் மூளையையும் சீராக இயங்க வைக்க சமச்சீர் உணவுகள் அவசியம். எல்லா தானியங்கள், காய்கறிகள், புரதச்சத்து நிறைந்த பருப்பு வகைகள், முட்டை, பால் மற்றும் தயிர், மீன் போன்றவற்றை நம் உணவில் அன்றாடம் சேர்த்துக்கொள்ள வேண்டும். சமச்சீர் உணவுகள், மூளை ஆரோக்கியம், ஞாபகசக்தி, கவனம், கிரகிக்கும் தன்மை ஆகியவற்றை அதிகரிப்பவை.

குளுட்டன் உள்ள உணவுகள்

- கோதுமை
- பார்லி
- கம்பு
- ஓட்ஸ்
- பிரட்
- பிஸ்கட்
- ரஸ்க்

ரவை
சேமியா
பெருங்காயம்
மைதா
கஞ்சி மாவு

Barley

குளுட்டன் ஃப்ரீ உணவு வகைகள்

பழங்கள்
காய்கறிகள்
முட்டை
பால் மற்றும் பால் சார்ந்த உணவுகளான தயிர், பனீர், வெண்ணெய், நெய், கோவா
அரிசி உணவுகள்
மக்காச்சோளம்
எல்லா வகையான மீன்கள்
அசைவ உணவுகள்
தினை வகைகள்
கீன்வா
தண்டுக்கீரை விதை மாவு
பழுப்பரிசி

குளூட்டன் உள்ள உணவுகளை உட்கொள்ள முடியாதவர்கள் கம்பு மாவு, மக்காச்சோள மாவு, பலா மாவு, மரவள்ளிக்கிழங்கு மாவு, அரிசி மாவு, தண்டுக்கீரை விதை மாவு போன்றவற்றில் தோசை மற்றும் சப்பாத்தி செய்ய கோதுமை மாவுக்கு மாற்றாகப் பயன்படுத்தலாம். குளூட்டன் ஃப்ரீ டயட்டை மருத்துவர் அல்லது உங்கள் உணவு ஆலோசகர் பரிந்துரையின்படி பின்பற்றப்பட வேண்டும். வெளியில் உணவகங்களில் சாப்பிடும்போது எந்த உணவுகளில் கோதுமை சேர்த்திருத்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டு உணவு உட்கொள்ள வேண்டும். ஃபுட் லேபிள் எனப்படும் அட்டவணை எல்லா பாக்கெட் உணவுகளிலும் இருக்கும். இதை அவசியம் பார்த்து வாங்குவதைப் பழக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

- ஸ்ரீமதி வெங்கட்ராமன், கிளினிக்கல் டயட்டீஷியன் அண்டு வெல்னெஸ் நியூட்ரிஷனிஸ்ட்
https://www.vikatan.com/food/healthy/a-dietician-explains-who-need-to-avoid-gluten-foods-and-guides-to-a-gluten-free-diet

புரிதல் : ராகுல் காந்தியுடன் பி.ஜே.பி-யை முட்டி மோத வைக்கும் சாவர்க்கர் யார்? சக்திவேல் -

வன்கொடுமை தொடர்பான கருத்துக்கு ராகுல் காந்தி மன்னிப்பு கோர வேண்டும் என்று பி.ஜே.பி-யினர் கொந்தளித்தபோது, `நான் ராகுல், சாவர்க்கர் அல்ல' என்றார். அதைக் கண்டித்த மகாராஷ்ட்ரா பி.ஜே.பி, சட்டமன்றத்துக்கு `நான் சாவர்க்கர்' என்று அச்சிடப்பட்ட தொப்பி அணிந்து எதிர்ப்பு தெரிவித்தது.



சாணக்கியர் - அமித் ஷா - சாவர்க்கர்

அமித் ஷாவின் `சாவர்க்கர் பாசம்' அகிலம் அறிந்த ஒன்று. அவரது வீட்டில் நிரந்தரமாகவே ஒரு சாவர்க்கர் வரைபடம் உண்டு. எப்போதும், அதன் முன்னால் அமர்ந்தபடிதான், போட்டோவுக்கு போஸே கொடுப்பார் மனிதர்.

ஆக, விஷயம் தெளிவாகிறது. சாவர்க்கரை அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பதற்கான வேலைகள், வேகமெடுத்துவிட்டன. ஏற்கெனவே, `ரூபாய் நோட்டில் சாவர்க்கர் படத்தைப் பொறிக்க வேண்டும்' என்ற கோரிக்கை வேறு நிறைய ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிறது. அதுவும் இனி மேலெழுந்து வரக்கூடும். இதன் ஆபத்தை நாம் எந்தளவுக்கு உணர்ந்திருக்கிறோம் என்று தெரியவில்லை. ஏனென்றால், சாவர்க்கருக்கு அளிக்கப்படும் அங்கீகாரம் என்பது, வெறுமனே அவருக்கான அங்கீகாரம் மட்டுமல்ல. அது, அவரது கோட்பாட்டுக்கு அளிக்கப்படும் அங்கீகாரமும்கூட. இந்த நேரத்தில், சாவர்க்கர் யார், அவரது அரசியல் எப்படிப்பட்டது, அவர் பாடுபட்டது யாருக்காக என்பதையெல்லாம், விரிவாகப் பேச வேண்டியது அதிஅவசியமாகிறது. இல்லையென்றால், நாளைக்கு ரூபாய் நோட்டில் காந்திக்குப் பதில் சாவர்க்கர் சிரிப்பதை, வரும் தலைமுறைப் பிள்ளைகள் பார்க்க நேரிடும். அமித் ஷா வேறு `வரலாற்றை மாற்றி எழுதுவோம்' என்று பீதி கிளப்பிக் கொண்டிருக்கிறார். ஆகவே, இப்போது பேசுவதுதான் சரி!

சாவர்க்கர் ஒரு சிந்தனைவாதி என்பதில் எவரும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. அவர் சிந்தனைவாதிதான்! ஆனால், அவரது சிந்தனைகள் எதை நோக்கி இருந்தன என்பதுதான் முக்கியமானது. அதையே அதிகம் கவனத்தில் எடுத்து விவாதிக்க வேண்டும். அவரது சிந்தனை என்ன. இந்து ராஷ்டிரம்தான்! அந்த இந்து ராஷ்டிரம் எப்படியிருக்கும் அவரே அதை விவரிக்கிறார்... `எவரெல்லாம் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் இல்லையோ, அவர்களெல்லாம் இந்தியர்களும் அல்ல'. ஒரு தேசியத்துக்கு கொடுக்கப்படும் `Motherland, Fatherland' என்ற கருத்துரு வாக்கங்களைத் தாண்டி, `Holy land' என்ற கருத்துரு வாக்கத்தை கொண்டுவந்து வைக்கிறார் சாவர்க்கர். அவரது அந்தத் தத்துவத்தின்படி, இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் இந்தியர்கள் அல்லர். ஏனென்றால், அவர்களின் புண்ணியபூமி அரேபியாவிலும் பாலஸ்தீனத்திலும் இருக்கிறது என்பது அவரது வாதம். இதைத்தான்

1905 தொடங்கி 1966 வரை வெவ்வேறு வார்த்தைகளில் பேசிக்கொண்டிருந்தார் அவர். அதாவது, அவர் மரணத்தைத் தழுவும் வரை அதிலிருந்து மாறவே இல்லை. கடைசிக்காலங்களில், `இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இந்து பெண்களைச் சூறையாடியதைப் போலவே, இந்துக்கள் இஸ்லாமியப் பெண்களைச் சூறையாட வேண்டும்' என்று சொல்லும் அளவுக்குக்கூட அவர் இறங்கியிருக்கிறார். மத அடிப்படைவாதத்தில் அவரது மனம் எந்த அளவுக்கு கெட்டித்தட்டிப் போயிருந்ததது என்பதற்கான உதாரணம், அந்த வார்த்தைகள்.

ஜனநாயக அரசியலில் ஒரு பாலபாடம் உண்டு. அதாவது, `அனைவரையும் உள்ளடக்கும் அரசியலுக்கு (Inclusive Politics) எவரெல்லாம் அச்சுறுத்தலாக இருக்கிறார்களோ, அவர்களெல்லாம் ஜனநாயகத்துக்கும் எதிராகவே நிற்கிறார்கள்' என்பதே, அது. சாவர்க்கர், அனைவரையும் உள்ளடக்கும் அரசியலுக்கு எதிராக நின்றவர். இங்கேயே பிறந்து, இங்கேயே வாழ்ந்து வரும் மாற்று மதத்தவர்களை `Others' என்று கூசாமல் சொன்னவர் அவர். `அவர்களுக்கு எந்த விதத்திலும் இந்த நாடு சொந்தமில்லை' என்ற கருத்தாக்கத்தை, சாவர்க்கரின் எழுத்துகளில் திரும்பத் திரும்ப பார்க்க முடிகிறது. ஆகவே, அவர் இந்தியாவின் ஜனநாயகப் பண்புக்கு முற்றிலும் எதிரானவர்! இப்படிப்பட்டவருக்கு, அகிலத்தின் மாபெரும் ஜனநாயக நாட்டினரான நாம், பாரத ரத்னா கொடுத்து அழகுபார்க்கப் போகிறோமா? அப்படிச் செய்தால், நமக்கு அடுத்து வரும் தலைமுறையினர் நம்மைப் பற்றி என்ன மதிப்பு வைத்திருப்பார்கள்?

காந்தி 'Power to people' என்று சொன்னார் என்றால், சாவர்க்கர் அதிலிருந்து அப்படியே வேறுபட்டு 'Power over people' என்று சொன்னார். அதாவது, மக்களின் மீது அரசு மேலாதிக்கம் செலுத்துவதை அப்பட்டமாக ஆதரித்தவர் சாவர்க்கர். போதாக்குறைக்கு, இந்தியாவை இந்துக்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு ராணுவ தேசமாக உருவகித்தார் சாவர்க்கர். காந்தி 'Power to people' என்று சொன்னார். சாவர்க்கர் அதிலிருந்து அப்படியே வேறுபட்டு `Power over people' என்று சொன்னார். அதாவது, மக்களின் மீது அரசு மேலாதிக்கம் செலுத்துவதை அப்பட்டமாக ஆதரித்தவர் சாவர்க்கர். அதனால்தான் அவருக்கு ஜெர்மனி பிடித்தது. பின்னாளில், இஸ்ரேலும் அவரது மனதைக் கவர்ந்ததற்குக் காரணம் அதுவே. இந்தியாவை காலனியாதிக்கத்தின் கண்கள் கொண்டு பார்த்தவர் சாவர்க்கர்' என்று சில ஆய்வாளர்கள் சொல்வது, அதனாலேயே!

இந்துத்துவத்தை கண்டுபிடித்தவர் சாவர்க்கர்தான்! விவேகானந்தரும் அரவிந்தரும் திலகரும் `இந்துயிஸம் (Hinduism)' என்று பேசியதை, `இந்துத்துவம் (Hindutva)' என்ற இடத்துக்கு நகர்த்தியவர் சாவர்க்கர். இந்துயிஸத்தை, இந்துமதத்தைப் பின்பற்றுவது, அதைப் பற்றி பேசுவது, அதன் தத்துவங்களை பரப்புவது என்று வரையறுக்கலாம். ஆனால், இந்துத்துவம் அப்படியல்ல. அது, இந்துக்களை ஒருங்கிணைப்பது, ஒருங்கிணைத்து ஓர் இந்து சமுதாயத்தைக் கட்டமைப்பது! அதாவது, இந்துயிஸம் இந்துக்களை ஒரு மதமாகப் பார்த்தால், இந்துத்துவா ஓர் இனமாகப் பார்க்கும். அந்த இனத்தின் ஆதிக்கத்துக்குள் அது தேசத்தைக் கொண்டு வரும். அந்தத் தேசத்தில், சிறுபான்மை இனத்தவர்கள் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படுவார்கள். அவர்களுக்கென்று எந்த உரிமையும் இருக்காது. இதை நோக்கியே, அந்த 'Holy land' என்ற பதத்தை வெகு சாதுரியமாகப் பயன்படுத்தினார் சாவர்க்கர்.

சாவர்க்கர்

இந்தியாவை முழுவதுமாக `இந்துமயமாக்குவதே' சாவர்க்கரின் நோக்கம். அதற்காக, படை உருவாக்குவது, அந்தப் படையை மக்கள் மேல் செலுத்தி அவர்களை ஆளும் அதிகாரத்தை அடைவது, அந்த அதிகாரத்தின் வழியே, நாடு முழுவதும் ஒற்றைத்தன்மையைக் கொண்டுவருவது என்று, தெளிவாக வரைபடம் வரைகிறார் சாவர்க்கர். `Hinduise all politics, Militarize Hinduism' என்ற பதத்தை அவர் அடிக்கடி பயன்படுத்துகிறார். இந்த ஒருங்கிணைத்தலை செய்ய அவருக்கு ஒரு எதிர்த்தரப்பு தேவைப்பட்டது. அதனால்தான், இந்து அல்லாதவர்களை, அதாவது இஸ்லாமியர்களை, கிறிஸ்துவர்களை 'Others' என்று அழைத்து, `Self' எனப்படும் இந்துக்களின் எதிரிகளாகக் கட்டமைக்கிறார் அவர். ஜைனர்கள், சீக்கியர்கள், பௌத்தர்களைக்கூட அவர் ஓரமாகவே நிறுத்துகிறார். அதுவும், அன்பையும் சமத்துவத்தையும் போதித்த பௌத்தத்தை, இஸ்லாம் கிறிஸ்துவத்துக்கு இணையாக வெறுக்கிறார். அவருடைய, 'Hindutva : Who is a Hindu' புத்தகம், ஏறக்குறைய ஹிட்லரின் 'Mein kampf' புத்தகத்துக்கு இணையானது!

சாவர்க்கரின் இந்து ராஜ்ஜியத்தின் இன்னொரு ஆபத்து, அது இந்து சமுதாயத்தையே பிளவுபடுத்திப் பார்க்கிறது என்பது. இதற்கு, சாவர்க்கர் அவ்வளவு பெரிய சனாதனவாதியும் அல்ல. கடவுள் நம்பிக்கையும்கூட அவருக்கு குறைவுதான். Agnostic வகையைச் சேர்ந்தவர். அவரின் மனைவியும் மகனும் இறந்தபோதுகூட, அவர் மதச்சடங்குகள் ஏதும் செய்யவில்லை. ஆனால், சாவர்க்கர் கோயில்கள் கட்ட குரல் கொடுத்திருக்கிறார். 1939-ல் டெல்லியில் சிவன் கோயில் ஒன்று இடிக்கப்பட்டபோது, அதை எதிர்த்தவர்களுள் சாவர்க்கர் முக்கியமானவர். அதில் கிடைத்த வெற்றியைப் பெருமளவில் கொண்டாடியவர் சாவர்க்கர். `இது போன்ற நடவடிக்கைகளே இந்து மக்களை ஒருங்கிணைக்கும்' என்று அருகிலிருப்பவர்களிடம் சொல்லி மகிழ்கிறார். கடவுளையே வணங்காதவர், கோயில் கட்டுமானங்களை ஏன் ஆதரித்தார் என்பதை முக்கியமாகப் பார்க்க வேண்டும். காரணம் அதுவேதான். அது, அவருக்கு ஓர் அரசியல்

ஆயுதம்! இந்துத்துவத்தின் தந்திரமே அதுதான். அதற்கு, மதம் என்பது மக்களை அடக்கியாளும் ஓர் அரசியல் கருவி மட்டுமே. அதைக் கடந்து யோசிப்பதற்கு இந்துத்துவத்தில் எந்த இடத்தையும் ஏற்படுத்தி வைக்கவில்லை சாவர்க்கர்.

`சிறைக் கொடுமைகளை என்னால் தாங்க முடியவில்லை. எண்ணெய் ஆலையில் போட்டு வதைக்கிறார்கள். அரசு கருணை காட்டி என்னை விடுவித்தால், நான் அரசியலமைப்பின் தீவிர ஆதரவாளனாகச் செயல் படுவேன் என உறுதி கூறுகிறேன். எந்த சூழ்நிலையிலும், அரசுக்கு சேவகம் செய்ய நான் தயாராக இருக்கிறேன். எங்களுக்கு அன்னையாக இருக்கும் அரசே கருணை காட்ட வில்லையென்றால், இந்த மகன் வேறு எங்கே சென்று நிற்பேன்...' சாவர்க்கர்

சாவர்க்கரின் இந்து சமுதாயமும் எப்படிப்பட்டது தெரியுமா? உயர்சாதி இந்துக்கள் ஆதிக்கம் செலுத்துவ தாகவே அது இருக்கும். ஏனென்றால், இந்து சமுதாயத்தின் அடித்தளமாக `வர்ணப் பாகுபாடு' இருக்க வேண்டும் என்று தெளிவாகச் சொல் கிறார் சாவர்க்கர். அந்த இந்து சமுதாயத்தின் முக்கிய மொழிகளும்கூட இந்தியும் சம்ஸ்கிருதமும்தான். கடவுளர்களும்கூட கிருஷ்ணனும் ராமனுமே. `பழங்குடி மக்கள் தங்களின் குலதெய்வத்தை துறந்துவிட்டு, ராமவழிபாட்டுக்கு மாற வேண்டும்' என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார் சாவர்க்கர். `வறண்டு கிடந்த இந்து மதத்தை, சாதிதான் செழிப்பாக்கியது' என்று சொல்லுபவராகவும் இருந்தார் அவர். அவரது தீண்டாமை ஒழிப்பு முழக்கங்கள் எல்லாமே, வெறும் பாவ்லா மட்டுமே. ஆங்கிலத்தில் `Escapism' என்று அதைச் சொல்வார்கள். வெற்று, தப்பித்தல்வாதம்! இது போதாதென்று, கறுப்பு நிறத்தவர்களை இந்துக்களாக ஏற்றுக்கொள்வதிலும் அவருக்கு தயக்கம் இருந்தது. இந்து பெண்களைப் பற்றியும் எங்கும் பெரிதாகப் பேசுவதில்லை சாவர்க்கர். `அவர்களின் கடமை அடுப்பங்கறை, குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுதல் மட்டுமே' என்பது சாவர்க்கர் கொண்டிருந்த எண்ணம். இத்தகையவரைத்தான், தனது அணிகலனாக இந்தியத் தாய் சூட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இவற்றையெல்லாம் விலக்கிவிட்டுப் பார்த்தாலும், அவரை அங்கீகரிப்பதற்கு மூன்று இடையூறுகள் இருக்கின்றன. முதலாவது, அடிமைப்படுத்திய ஆங்கிலேயனிடமே `நான் உங்கள் சேவகன்' என்று அவர் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தார். இரண்டாவது, `இங்கே இரண்டு தேசங்கள் இருக்கின்றன' என்று ஜின்னாவுக்கு பாயின்ட் எடுத்துக்கொடுத்ததும்கூட அவரேதான். மூன்றாவதுதான் மிக முக்கியமானது. அதாவது, தேசப்பிதா காந்தி கொலைக்குத் தூண்டுதலாக இருந்ததாக அவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

முதலில் மன்னிப்புக் கடிதம்! - 1911-ம் ஆண்டு ஜூன் மாதம், அந்தமான் செல்லுலார் சிறையை வந்தடைகிறார் சாவர்க்கர். நாசிக் மாவட்ட நீதிபதி ஜாக்சன் கொலைக்கு, அவர் தூண்டுதலாக இருந்தார் என்பது வழக்கு. அப்போது, `ஆபத்தான கைதி' என்று அவருக்கு அடையாளம் இடப்பட்டது உண்மைதான். `D' என்பது அந்த கோட்வேர்ட். ஆனால், சாவர்க்கர் ஒன்றும் அவ்வளவு ஆபத்தானவராக ஆங்கிலேயருக்கு இருக்கவில்லை என்பதுதான் முரண்பாடு. சாவர்க்கர் 1924-க்கு முன்பு மன்னிப்புக் கடிதம் எழுதினார் என்பதுதானே, நாம் அறிந்தது. ஆனால், சிறையில் அடைக்கப் பட்ட சில மாதங்களிலேயே, ஆங்கிலேயருக்கு மன்னிப்புக் கடிதம் எழுத ஆரம்பித்துவிட்டார் சாவர்க்கர். 1911-லேயே அவர் ஒரு கடிதம் எழுதினார். அது இப்போது கிடைப்பதில்லை. ஆனால், 1913 அவர் அனுப்பிய மற்றொரு கடிதத்தில் அந்த முந்தைய கடிதத்தைக் குறிப்பிடுகிறார். கடிதத்தில், `அடிபணிதல்' வாசகங்கள் பளிச்சென்று இருக்கின்றன. `To : The home member of the government of India' என்று தலைப்பிடப்பட்டிருக்கும் அந்தக் கடிதத்தில், `சிறைக் கொடுமைகளை என்னால்

தாங்க முடியவில்லை. எண்ணெய் ஆலையில் போட்டு வதைக்கிறார்கள். அரசு கருணை காட்டி என்னை விடுவித்தால், நான் அரசியலமைப்பின் தீவிர ஆதரவாளனாகச் செயல்படுவேன் என உறுதி கூறுகிறேன். எந்தச் சூழ்நிலையிலும் அரசுக்கு சேவகம் செய்ய நான் தயாராக இருக்கிறேன். எங்களுக்கு அன்னையாக இருக்கும் அரசே கருணை காட்ட வில்லையென்றால், இந்த மகன் வேறு எங்கே சென்று நிற்பேன்...' என்று சொல்கிறார் சாவர்க்கர்.

சாவர்க்கரைப் போலவே, பகத்சிங்கும் ஒரு கடிதத்தை பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எழுதினார். லாகூர் சிறையில் இருந்து 1931-ம் ஆண்டு அவர் அனுப்பிய கடிதம் அது. அதில், `உங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு, எங்களை போர்க்கைதிகளாக வகைப்படுத்துகிறது. ஆம், நாங்கள் போர்க்கைதிகள்தான். ஆகவே, எங்களை நீங்கள் தூக்கிலிடக்கூடாது. மாறாக, துப்பாக்கித் தோட்டாக்களால் சுட வேண்டும்' என்று, அறிவித்தான் அந்த 23 வயது இளைஞன். அடுத்து, `இந்தப் போர் தொடரும்' என்று அறிவித்துவிட்டு, `எங்களைக் கொல்லப்போகும் ராணுவ அதிகாரிகளை எப்போது அனுப்புகிறீர்கள்' என்ற கேள்வியோடு அந்தக் கடிதத்தை முடிக்கிறார் அவர். கடிதத்தில் ஓர் இடத்தில், குறித்துக்கொள்ளுங்கள். முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் நாள்கள் எண்ணப்படுகின்றன. ஒருநாள் இங்கு, சோசியலிஸ சமுதாயம் மலரும்' என்று கர்ஜிக்கிறான், அந்த மாவீரன்.

கடிதம் முழுவதுமே, அப்படித்தான். அதிகமும் தேசத்தைப் பற்றித்தான் பேசுகிறார் பகத் சிங். இதற்கு லாகூர் சிறையும் ஒன்றும் சொகுசு சிறையல்ல. ஆனாலும், பகத்சிங் அதைப் பற்றியெல்லாம் கவலைகொள்வதில்லை. உதிரம் முழுவதும் விடுதலை வேட்கை ஓடும் ஒருவனின் வார்த்தைகள் எப்படியிருக்குமோ, அப்படியிருக்கின்றன பகத் சிங்கின் வார்த்தைகள். உறைவிட்டெழும் வாளென, நாண் தொட்டு புறப்படும் அம்பென பாய்கின்றன, அவன் சொற்கள்! அப்படியே சாவர்க்கரின் வார்த்தைகளையும் பார்க்கவும். `நான் இப்படியெல்லாம் கஷ்டங்களை அனுபவிக்கிறேன்... கருணை காட்டுங்கள்... நல்ல படியாக நடந்துகொள்வேன்' என்றெல்லாம் அந்நியனிடம் பணிகிறார் சாவர்க்கர். இவர் எப்படி பாரதத்தின் ரத்தினம் ஆவார்? `நீங்கள் என்னை விடுவித்தால், இந்தியாவில் உங்கள் புகழ் பெருகும்' என்றெல்லாம்கூட ஆங்கிலேயர்களிடம் உருகியிருக்கிறார் சாவர்க்கர்.



ஜின்னா

1924-ல் அவரது விடுதலைக்குக் காரணமான மன்னிப்புக் கடிதம், இன்னும் உக்கிரமானது. `என்னை விடுவித்தால் நான் உங்களுக்கு நல்ல சேவகனாக இருப்பேன்' என்று அதில் பட்டயமே எழுதித் தருகிறார் சாவர்க்கர். `நான் எவ்வளவு நன்றாக நடந்துகொள்ள முடியுமோ, அவ்வளவு நன்றாக நடந்துகொள்கிறேன்...' என்றும்கூட வாக்குறுதி அளிக்கிறார். வெளிவந்த பின், அவர் அதைத்தான் செய்தார். சிறையிலிருந்து வெளியேவந்த பிறகுதான் `Hindutva : Who is a Hindu' புத்தகத்தையே எழுதினார். அது, இந்தியாவை பிரித்தாளத் துடித்துக்கொண்டி ருந்த பிரிட்டிஷாருக்கு ஒரு கையேடாகவே உதவியது. ஜின்னாவுக்கும் அது ரெஃப்ரன்ஸாக மாறியது. 1926-ல் சாவர்க்கரைப் பற்றி ஒரு புத்தகம் வெளிவந்தது. அவரது வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் அது. பெயர், `Life of Barrister Savarkar'. அதை எழுதியவரின் பெயர் சித்திரகுப்தன். விநோதம் என்னவென்றால், அந்த சித்திரகுப்தனே சாவர்க்கர்தான். ஏனென்றால், அந்தச் சித்திரகுப்தன் அதற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி எந்தப் புத்தகமுமே எழுதவில்லை. எழுதிய ஒரே புத்தகம் சாவர்க்கருடைய வரலாறு மட்டும்தான். சுயவரலாறு எல்லோரும் எழுதுவதுதான். ஆனால், அதை அவர்களின் பெயரில் எழுதுவது அல்லவா உலக வழக்கம்! தனது படத்தை தானே வணங்கிய நித்யானந்தாவைப்போல, தன்னைப் பற்றி தானே புகழ்ந்து எழுதியவர் சாவர்க்கர். இதுதான் அவரது நேர்மை!

`அவர் ஏன் மன்னிப்புக் கேட்டார் தெரியுமா? தேசப் பணிக்காகவே அதைச் செய்தார்' என்கிறார்கள் சிலர். அப்படி மன்னிப்புக் கேட்டு வெளியேவந்து சாவர்க்கர் செய்த மாற்றங்கள் என்று எதுவுமில்லை. ஆங்கிலேயனை எதிர்க்கும் எந்தச் செயல்களையுமே அவர் முழுவீச்சில் செய்யவும் இல்லை. மழைக்கு பயந்து எலி வளைக்குள் ஒடுங்கிக்கொள்வதைப்போல, ஒடுங்கிக் கொண்டார். ஆங்கிலேயன் இந்தியாவைவிட்டு விலகும் வரை, அவருக்கு மழைக்காலம் போகவே இல்லை. காந்தி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஆரம்பித்தபோது, அதிலிருந்து விவரமாக விலகிநின்றவர் சாவர்க்கர். இப்படி இன்னும் எத்தனையோ சொல்லலாம்.

`காந்தி 4 வருடங்கள்தான் சிறையில் இருந்தார். ஆனால், சாவர்க்கர் 14 வருடங்கள் சிறையில் இருந்தார். அப்படியென்றால், யார் பெரிய தேசபக்தர்' என்றும் கேட்கிறார்கள். இதில் இருக்கும் தகவல் சரி, ஆனால், பார்வை தவறு. காந்தி ஒரே முறையாக 4 வருடங்கள் சிறையில் இருக்கவில்லை. மொத்தம் பதினொரு முறை அவர் சிறைக்குச் சென்று திரும்பினார். தென்னாப்பிரிக்கச் சிறைகளும் அதில் அடக்கம். ஒன்றை நோக்கவும். ஒவ்வொரு முறையும் ஒரு போராட்டம், அதில் விசாரணை, அதற்குப் பிறகு தண்டனை என்று சிறை சென்றவர் அவர். அவர் சிறை சென்றபோதெல்லாம், மக்கள் கொதித்தெழுந்தார்கள். காந்தியை விடுவிக்கக்கோரி போராடினார்கள். அவரும் தன்பங்குக்கு சிறை சீர்திருத்தம் என்று களமிறங்கினார். ஆக, பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு கண்முன்னால் இருந்த ஒரே வழி, காந்தியை விடுவிப்பது மட்டும்தான். ஒரு தடவை, நான்கு நாள்களுக்குள் மூன்றுமுறை காந்தி கைது செய்யப்பட்டு திரும்பத் திரும்ப விடுவிக்கப்பட்டிருக்கிறார். அந்தளவுக்கு ஆங்கிலேய அரசுக்கு நெருக்கடிகளை உருவாக்குபவராக இருந்திருக்கிறார் காந்தி! தென்னாப்பிரிக்காவில் காந்தி சிறைத்தண்டனை முடிந்து வெளியே வந்தபோது, காந்தியை வரவேற்க ஆயிரக்கணக்கான மக்கள் வாசலில் திரண்டு நின்றார்கள் என்பது வரலாறு. அவர் பின்னால் எப்போதுமே மக்கள் இருந்தார்கள். ஏனென்றால், அவர், அவர்களின் மனங்களில் இருந்தார். 75 வயதிலும்கூட சிறைக்குச் செல்லும் துணிவை, அவருக்கு அளித்தது அந்த மக்களின் அன்புதான்!

ஆனால், சாவர்க்கர் விவகாரம் அப்படியல்ல. அவருக்காக யாரும் இங்கே கொதித்தெழவில்லை. சாவர்க்கரை விடுவிக்கக்கோரி ஒரு போராட்டம்கூட இங்கே நடக்கவில்லை. ஏன், அவரது தரப்பினரேகூட அவரை மறந்து விட்டிருந்தார்கள். சாவர்க்கருக்கும் மக்கள் செல்வாக்குக்கும் காத தூரம். சாவர்க்கர் என்றொருவர் இருக்கிறார் என்பதையே மக்கள் அறிந்திருக்கவில்லை. அறியும் அளவுக்கு சாவர்க்கரும் மக்களுக்காக எதுவும் செய்யவில்லை. அவர் பேசியதெல்லாம் வன்முறை, வெறுப்பு, பிரிவினை மட்டும்தான். சிறைக்குள்ளேயும் அவர் அதைத்தான் செய்தார். கைதிகளை இஸ்லாமியர், இந்துக்கள் என்று பிரித்துப் பார்த்து வேலையைக் காட்டினார். இது, அவர் எழுதிய அந்தமான் சிறை அனுபவங்கள் புத்தகத்திலேயே பதிவாகியிருக்கிறது. `இஸ்லாமியர்களின் தொழுகை நேரத்தில், சங்கநாதம் எழுப்புங்கள் என்று இந்துக்களை அவர் தூண்டினார்' என்று, அவரது ஆதரவாளர்களே பதிவு செய்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலே, `நான் நெருப்புடன் விளையாடுகிறேன் என்று எனக்குத் தெரியும். ஆனால், அதை நான் தொடர்ந்து செய்வேன்' என்று, ஆங்கிலேயனின் நீதிமன்றத்தில் நெஞ்சம் நிமிர்த்தி அறிவித்தவர் காந்தி!

ஜின்னாவுக்கு முன்பே, இரண்டு தேசங்கள் கோட்பாட்டை முன்மொழிந்தவர் சாவர்க்கர்தான். நன்றாகக் கவனிக்கவும். ஜின்னாவை வழிமொழிய வில்லை சாவர்க்கர். அவர்தான் முன்மொழியவே செய்கிறார். அந்த `Holy land' கருத்தாக்கத்திலேயே, இரண்டு தேசங்களுக்கான அடித்தளம் போடப்பட்டுவிட்டது. அதையே, பின்னாளில் அரசியல்வெளியில் விரித்தெடுத்தார் ஜின்னா. அதாவது, கல்லை உரசி நெருப்பைப் பற்ற வைத்தார் சாவர்க்கர். ஜின்னா அதை ஊதிப் பெரிதாக்கினார். அவ்வளவுதான். உண்மையில் 1939-ம் ஆண்டு லாகூர் மாநாட்டில்தான், `இரண்டு தேசங்கள் (Two Nations)' எனும் தீர்மானத்தையே போடுகிறது, முஸ்லிம் லீக். ஆனால், 1937-ம் ஆண்டே, `இரண்டு தேசங்கள்' தீர்மானத்தை முன்மொழிந்துவிட்டது, இந்து மகா சபா. சாவர்க்கர் அப்போது அதன் தலைவர். 1937-ம் ஆண்டின் முற்பகுதியில், அகமதாபாத்தில் நடந்த இந்து மகாசபா கூட்டத்தில் பேசிய சாவர்க்கர், `இங்கே இரண்டு தேசங்கள் இருக்கின்றன. ஒன்று

இந்துக்களுடையது, இன்னொன்று முஸ்லிம்களுடையது' என்று பிரகடனம் செய்தார். அந்தப் பிரகடனமே பின்னர் தீர்மானமானது.

அடுத்து காட்சிக்கு வருகிறார், மாதவ சதாசிவ கோல்வால்கர். சாவர்க்கரின் சிஷ்யப்பிள்ளை இவர். கோல்வால்கர் என்ன சொல்கிறார் தெரியுமா? `இந்துப் பெரும்பான்மை அடையாள அரசியலே உண்மையான தேசியவாதம். அது அல்லாத எந்த அரசியலும் இந்தியாவுக்கு விரோதமானது' என்று இன்னொரு குண்டைத் தூக்கி வீசுகிறார். இவர்களின் இதுபோன்ற கூற்றுகளுக்குப் பிறகுதான், ஜின்னா அதிக நம்பிக்கை கொள்கிறார். `அவர்களே சொல்லிவிட்டார்கள். அப்புறம் என்ன?' என்று பிரிவினைக்கத்தியை இன்னும் ஆழமாக இந்தியாவின் நெஞ்சில் ஜின்னா இறக்க ஆரம்பித்தது 1940-களுக்குப் பிறகே! இன்னுமொரு தகவல். 1945-ம் ஆண்டு இன்னும் எல்லையைக் கடக்கிறார் சாவர்க்கர். `ஜின்னாவின் இரண்டு தேசங்கள் எனும் கருத்தாக்கத்தில் எனக்கு எந்த முரண்பாடும் தெரியவில்லை. நாம் இந்துக்கள் ஒரு தேசம், முஸ்லிம்கள் இன்னொரு தேசம்' என்கிறார்.

இங்கே நாம் இன்னொன்றை பார்க்க வேண்டும். இன்றுவரை பெரியாருக்கும் அண்ணாவுக்கும் ஏன் பாரத ரத்னா மறுக்கப்படுகிறது? எம்.ஜி.ஆரால் அடைய முடிந்த அந்த விருதை அவரின் ஆசான்களான அவர்களால் ஏன் அடைய முடியவில்லை? இதற்குக் காரணமாகச் சொல்லப்படுவது ஒரே ஒரு விஷயம்தான். அதாவது, `அவர்கள் பிரிவினை பேசினார்கள்' என்பது. பெரியாரும் அண்ணாவும் பேசியது பிரிவினை என்றால், சாவர்க்கர் பேசியதற்கு பெயர் என்ன? பெரியார், அண்ணாவுக்கு ஒரு நியாயம், சாவர்க்கருக்கு ஒரு நியாயமா?'அதெப்படி ஒரே விஷயத்தில் இரண்டு நியாயங்கள் இருக்க முடியும்' என்பதே நாம் எழுப்பும் கேள்வி!



காந்தி

கடைசியாக, காந்தி கொலை! காந்தி கொலையில் சிக்கியவர்கள், மொத்தம் 9 பேர். நாதுராம் கோட்சே, அவரின் சகோதரர் கோபால் கோட்சே, நாராயண் ஆப்தே, விஷ்ணு கர்கரே, மதன்லால் பஹ்வா, ஷங்கர் கிஸ்தயா, தத்தாத்ரேயா பர்சுரே மற்றும் விநாயக் தாமோதர் சாவர்க்கர். இன்னொருவர் இருக்கிறார். அவர் திகம்பர் பாட்ஜே. இந்த பாட்ஜே மிகவும் முக்கியமானவர். ஏனென்றால், இவரது வாக்குமூலம்தான் கோட்சேவுக்கும் சாவர்க்கருக்கும் இருந்த தொடர்பை, தெள்ளத்தெளிவாகக் காட்டியது. பாட்ஜேவின் வாக்குமூலம் இது... `1948 ஜனவரியில் நாங்கள் இருமுறை சாவர்க்கரை சந்தித்தோம். முதல் சந்திப்பு ஜனவரி 14-ம் தேதி நடந்தது. நான், நாதுராம், ஆப்தே மூவரும் பாம்பேயில் இருக்கும் சாவர்க்கர் சதனுக்குச் சென்றோம். இரண்டாவது மாடியில் அவரது அறை இருந்தது. நான் கட்டடத்துக்கு வெளியே நின்றேன். நாதுராமும் ஆப்தேவும் உள்ளே சென்றனர். சிறிது நேரம் கழித்து இருவரும் வெளியே வந்தனர். `காந்தியையும் நேருவையும் முடிக்க வேண்டும் என்று அவர் சொன்னதாக கோட்சே என்னிடம் சொன்னார்'. `Gandhi and Nehru should be finished' என்ற வார்த்தையையே வாக்குமூலத்தில் சொல்கிறார் பாட்ஜே. அந்த ஜனவரி 14-ம் தேதிதான், கோட்சேவின் கைக்கு துப்பாக்கியும் வந்து சேர்கிறது.

அடுத்த சந்திப்பு, ஜனவரி 17-ம் தேதி நடக்கிறது. இப்போதும் அதே மூவர்தான் செல்கிறார்கள். இந்த முறை பாட்ஜே, சதனுக்குள் நுழைந்து, முகப்புப் பகுதியில் நிற்கிறார். 10 நிமிடம் கழித்து கோட்சேவும் ஆப்தேவும் மாடி அறையில் இருந்து வெளியே வருவதை, பாட்ஜே கவனிக்கிறார். அவர்களுக்கு முன்னால் நின்றபடி ஒரு மனிதர் பேசிக்கொண்டிருக்கிறார். அவரது முகம் பாட்ஜேவுக்கு சரியாகத் தெரியவில்லை. ஆனால், குரல் நன்றாகக் கேட்கிறது. அந்த நபர், மராத்தியில் பேசுகிறார். `வெற்றியுடன் திரும்புங்கள்' என்று, அவர் இருவர்களிடம் சொல்லும் வார்த்தை பாட்ஜேவின் காதில் விழுகிறது. அடுத்து, ஜனவரி 20-ம் தேதி, காந்தியைக் கொல்ல ஒரு முயற்சி நடக்கிறது. அதைச் செய்தது, மதன்லால் பஹ்வா. `விஷ்ணு கர்கரேவால் சாவர்க்கரிடம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டவன் அவன்' என்பது, சாவர்க்கரின் உதவியாளர்களான ராமச்சந்திர காசரும் விஷ்ணு தம்லேவும் அளித்த வாக்குமூலம். ஆனால், அந்த முயற்சி தப்புகிறது. பஹ்வா கைது செய்யப்படுகிறான். ஜனவரி 30-ம் தேதி காந்தி கொல்லப்படுகிறார். கோட்சேவின் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட மூன்று குண்டுகள் அதைச் செய்கின்றன.

பாட்ஜேவை `நம்பகமான சாட்சி (Trustful Witness)' என்றே வரையறுக்கிறார், விசாரணை நீதிமன்றத்தின் நீதிபதி ஆத்ம சரண். ஆனால், அவரது சாட்சியத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள், கிடைக்காமல் போகின்றன. இதன் அடிப்படையிலேயே, சாவர்க்கர் விடுவிக்கப்படுகிறார். உண்மையில், கோட்சேவுக்கும் சாவர்க்கருக்கும் இருந்த உறவு குரு - சிஷ்யன் வகையிலானது. இந்து மகாசபா கூட்டங்களுக்கு, கோட்சேவையும் ஆப்தேவையும் அழைத்துச் செல்வதில், அதிக ஆர்வமாக இருந்திருக்கிறார் சாவர்க்கர். ஆனால், காந்தி கொலைக்குப் பிறகு, இருவருக்கும் இடையே விரிசல் உண்டாகிறது. காரணம், சாவர்க்கரின் சந்தர்ப்பவாத வாக்குமூலம்! கோபால் கோட்சேவின் வழக்கறிஞர் இனாம்தார் நாதுராமின் அப்போதைய மனவோட்டம் என்னவாக இருந்தது என்பதைப் பதிவு செய்கிறார். `நாதுராம் சிறையில் தனிமைப்பட்டுக்கிடந்தார். அவருக்கு அப்போது தேவைப்பட்டது அவரது கையை அன்பாகத் தொட்டு உரையாடக்கூடிய அவரது குருவின் சொல். ஆனால், அது நடக்கவில்லை. அந்த வருத்தத்தை சிறையில் என்னை சந்தித்தபோது பகிர்ந்துகொண்டார் நாதுராம்' என்கிறார் அவர்.

1964 அக்டோபரில் கோபால் கோட்சே விடுதலையானார். அடுத்த மாதமே, அவருக்கு ஒரு வரவேற்பு விழா நடக்கிறது. அதில், `காந்தியைக் கொல்வதன் அனுகூலங்களை

எனக்கு விளக்கினான் நாதுராம்’ என்று சொல்கிறார் கோபால் கோட்சே. விவகாரம் மீண்டும் வெடிக்கிறது. நீதிபதி ஜேஎல் காபூர் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டு, காந்தி கொலை மறு விசாரணை செய்யப்படுகிறது. இது நடந்தது 1965 மார்ச் மாதம். அடுத்த வருடம், பிப்ரவரி மாதம் சாவர்க்கர் இறக்கிறார். உணவையும் தண்ணீரையும் மறுத்து வலுக்கட்டாய மாக அவர் அந்த மரணத்தைத் தேடிக்கொள்கிறார். அவர் அந்த முடிவை எடுக்க முக்கியமான காரணம், காபூர் கமிட்டியால் அவர் முற்றிலுமாக சுற்றி வளைக்கப்பட்டிருந்தார் என்பது. இன்னும் கொஞ்சநாள் இருந்திருந்தால், காபூர் கண்டிப்பாக சாவர்க்கர் கையில் விலங்கு மாட்டியிருப்பார். காபூர் அறிக்கையின் ஆறாம் அத்தியாத்தில், `Background of the accused' என்றொரு பகுதி இருக்கிறது. அதில், காந்தி கொலையில் சாவர்க்கருக்கு இருந்த பங்கு, விரிவாகவே பேசப்படுகிறது.

இவ்வளவு ஏன்? 1966-ல் கோபால் கோட்சேவின் `Gandhi's murder and I' என்ற புத்தகம் வெளியானது. அதில், `1929 ரத்னகிரியில் இருந்தபோதிலிருந்தே சாவர்க்கருக்கும் நாதுராமுக்கும் நல்ல பழக்கம். தனிப்பட்ட முறையில் தினமும் நிறைய பேசிக்கொள்வார்கள்’ என்று சொல்கிறார் கோபால் கோட்சே. ஆகவே, காந்தி கொலைக்கு சாவர்க்கர் ஏதோ ஒருவகையில் காரணமாக இருந்தார் என்பது உறுதியாகிறது.

காந்தி மீதான சாவர்க்கரின் பகைக்கு மிக முக்கியக் காரணம், அவரது அகிம்சை! வாழ்வு முழுதுமே, `Hindu Masculinity (இந்து வீரம்)’ என்பது குறித்து தீவிரமாகப் பேசுகிறார் சாவர்க்கர். ஒன்று தெரியுமா? சாவர்க்கர் பசுவழிபாட்டை கடுமையாக எதிர்த்தவர். அதற்குப் பின்னால் இருந்தது, பன்மைத்துவத்தைப் பேணும் அக்கறை என்று தவறாக நினைக்க வேண்டாம். `பசுவை வணங்கினால் பசுவைப் போலவே நாமும் சாந்தமாகிவிடுவோம்’ என்று அவர் எண்ணியதே, அதற்குக் காரணம். அந்த அளவுக்கு அகிம்சை அவருக்கு ஆகாத ஒன்றாக இருந்தது. அவர் ஆரம்ப காலத்தில் அங்கம் வகித்த, அபினவ் பாரத் அமைப்பு, அடிப்படையிலேயே வன்முறையைப் போற்றும் அமைப்பு. அதிலிருந்து கிளைத்து எழுந்து வந்தவர் அவர்! இந்துக்களை வீரம்மிக்க ஒரு சமுதாயமாகவே அவர் உருவகித்தார். `பள்ளிகளில் படிப்பைவிட உடற்பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்’ என்று அவர் குரல் கொடுத்தது, அதற்காகவே. கனவு வெளியில், வேதகாலத்திலேயே வாழ்ந்துகொண்டிருந்த மனிதர் அவர். ஆகவே, அகிம்சை அவருக்கு பிடிக்கவில்லை.

இப்படிப்பட்டவர், வீரம்செறிந்த நேதாஜியுடன் இணைந்திருக்கலாமே என்ற கேள்வி, சிலருக்கு எழலாம். அந்தக் கேள்வி நியாயமான ஒன்று. ஆனால், அங்கேதான் ஒரு விஷயம் இருக்கிறது. அதாவது, காந்தியைப்போலவே, நேதாஜியும் உடையாத, மதச்சார்பு இல்லாத ஒரு இந்தியாவை கனவு கண்டவர். நேதாஜியின் அகிம்சையைக் காந்தி சந்தேகித்தாரே ஒழிய, அவரது மதச்சார்பற்ற தன்மையை அவர் எப்போதுமே சந்தேகித்ததில்லை. நேதாஜியின் படையில் இஸ்லாமியர்களும் அதிகளவில் பங்கெடுத்ததற்கு, அவரது மதச்சார்பற்ற தன்மையே காரணம். அது, சாவர்க்கரின் பிரித்தாளும் கொள்கைக்கு உவப்பானதாக இல்லை. அதுவும் இல்லாமல், சாவர்க்கர் களவீரரும் அல்ல. அவர் எப்போதுமே பின்னால் இருந்து இயங்குபவர். தூண்டிவிடுவதில் சமர்த்தர். `Man in the chair' என்போம் அல்லவா, அதே போன்றவர்.

இன்னொன்று தெரியுமா? அவர், இந்தியாவில் வைத்து கைது செய்யப்படவில்லை. லண்டனில் வைத்துதான் கைதானார். வில்லியம் கர்சனின் கொலையாக இருக்கட்டும், ஜாக்சனின் கொலையாக இருக்கட்டும், அவர் நேரடியாகச் செயலாற்றவே இல்லை. அதற்குரிய அத்தனை உதவிகளையும் செய்தார், திட்டங்களை வகுத்தார். `20 துப்பாக்கிகளை அவர் லண்டனிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பினார்’ என்கின்றன, தரவுகள். ஆனால், எங்குமே காட்சிக்கு வராமல் சாமர்த்தியமாக ஒதுங்கிக் கொண்டார்

சாவர்க்கர். அந்தமான் சிறையிலும்கூட தூண்டிவிடும் வேலையை கச்சிதமாகச் செய்திருக்கிறார். சக கைதிகளை உண்ணாவிரதத்துக்குத் தூண்டிவிட்டுவிட்டு, அவர் உணவருந்த சென்ற நிகழ்வும்கூட நடந்திருக்கிறது.

ஆகவே, இதுதான் சாவர்க்கர்! இவைதான் அவரது அரசியல்! மக்களைப் பிரித்தாளும் சித்தாந்தம், களத்துக்கு வராமல் பின்னே இருந்து இயங்குவது, மாட்டிக்கொண்டால் சீடனாகவே இருந்தாலும் கழட்டிவிடுவது என்று இருந்தவர் சாவர்க்கர். அவரது சித்தாந்தத்தாலோ, அவரது செயற்பாடுகளாலோ இந்தியாவுக்கும் எந்தப் பயனுமில்லை. இவ்வளவு எடுத்துச் சொன்ன பிறகும், `சாவர்க்கருக்கு பாரதரத்னா கொடுத்தால் என்ன தப்பு' என்று கேட்பவர்களிடம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. குறைந்தபட்சம் ஒன்றை மட்டுமேனும் உணர்வோம். சாவர்க்கர் முன்னே எழுந்துவரும் ஒவ்வொருமுறையும் அசோகர் புதைக்கப்படுகிறார், அவரது தத்துவம் புதைக்கப்படுகிறது. ஒன்றை யோசிப்போம். அகிலத்தின் எத்தனையோ நாடுகளில் ஜனநாயகம் வெறும் கனவாக மட்டுமே இருக்கும் சூழலில், இந்தியா மட்டும் எப்படி அதை இன்னும் தக்கவைத்திருக்கிறது? காற்றடித்தாலும் மழையடித்தாலும், இந்தியாவின் ஜனநாயக தீபம் மட்டும் தொடர்ந்து ஒளிர்வது எப்படி. காரணம் எளிது. ஏனென்றால், இந்தியாவின் மரபிலேயே ஜனநாயகப் பண்புகள் இறுக்கிக் கட்டப்பட்டிருக்கின்றன. கட்டியவர், அந்த மகா சக்கரவர்த்தி அசோகர்! அவரும் ஓர் அரசர்தான். ஆனால், மற்ற அரசர்களிடம் இருந்து அசோகர் எங்கே வேறுபடுகிறார் தெரியுமா. மக்களின் மீதான அபிமானத்தில் வேறுபாடுகிறார். மரபை சீரமைத்து முன்னெடுத்துச் சென்றதில், வேறுபடுகிறார். கலிங்கத்தின் தயா நதிக்கரையில் இறந்து மிதந்த மனித உடல்களைக் கண்டு, 'என்ன செய்துவிட்டேன் நான்...' என்று வருந்திய குரலில், வேறுபடுகிறார்.

ஆம். இத்தேசம் அசோக தத்துவத்தால் கட்டமைப்பட்டது! `வரலாற்றை நிறைத்து நிற்கும் எத்தனையோ பேரரசர்களின் பெயர்களின் மத்தியில், அசோகர் மட்டுமே ஒரு வீழா நட்சத்திரமென தனித்து ஒளிர்கிறார்' என்று ஆய்வாளர் ஹெச்.ஜி. வெல்ஸ் விழிவிரித்து கூறினாரே, அந்த அசோகரின் தத்துவத்தால் கட்டமைக்கப்பட்டது! இதை உணர்ந்தே, சிவாஜியை இடதுபக்கமும் அக்பரை வலது பக்கமும் ஒதுக்கிவிட்டு, அசோகரை இந்தியாவுக்கு அடையாளமாக்கினார் நேரு. தர்ம சக்கரம் சுழலும் அந்தச் சிங்கச்சிலையை இந்திய சின்னமாக்கி, `எழுக அவர் வேதம். எக்குடியும் என்குடியே என்றுரைக்கும் அசோகவேதம்' என்று நேரு அறிவித்தபோது, இந்திய அன்னை துள்ளிக்குதித்து கூத்தாடினாள். சாவர்க்கர் வழிபாடு, அவளின் அந்த சந்தோஷத்தைக் கண்டிப்பாக நிர்மூலமாக்கும். 2,000 ஆண்டுகளாக இந்த மண்ணில் ஊறி நின்றிருக்கும் மகத்துவத்தை, அது 20 வருடங்களுக்குள் அழித்தொழிக்கும்.

அறிக... அசோகரே புதைகிறாரென்றால் காந்தியும் இருக்கப்போவதில்லை. நேருவும் அகன்றிருப்பார். அம்பேத்கரும் கூட கைவிட்டிருப்பார். இது உருவாக்கப்போகும் விளைவை, நம்மால் இப்போது உணர முடியாது. ஹிட்லரின் ஜெர்மனியாக, நத்தேன்யாஹூவின் இஸ்ரேலாக இத்தேசம் மாற்றப்பட்ட பிறகுதான், நமக்கு அந்த உணர்வு எழும். ஆனால், அப்போது எல்லாமே கையைமீறிப் போயிருக்கும். நமக்கான கங்கை களைத் தேடி நாம் அலையத் தொடங்கியிருப்போம். நாசிக்குள் புகுந்து நம்மை நிலைகுலையச் செய்யும் ரத்தத்தின் வீச்சத்தை நம்மால் கடக்கவே முடியாமல் இருக்கும். அது வீடோ, அலுவலகமோ, பேருந்தோ, ரயிலோ, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து வெறுமனே அமர்ந்திருப்போம். உண்ணச் சென்றால், தட்டில் இஸ்லாமிய குழந்தையின் உடைக்கப்பட்ட வெள்ளெலும்பு உணவென நெளியும். உறங்கச் சென்றால், கிறிஸ்துவ குழந்தையின் உரிக்கப்பட்ட தோல், படுக்கை விரிப்பென விரியும். அரண்டு ஓடிவந்து வெட்ட வெளியில் நின்று, வான்நோக்கி இறைஞ்சுவோம்,

`அய்யோ... அப்போதே உணரத் தவறிவிட்டோமே...' என்று. அதைக் கேட்கவும் அப்போது நாதியிருக்காது. கடவுளால் தனித்துவிடப் பட்டிருப்போம். அறத்தால் தள்ளி வைக்கப் பட்டிருப்போம். மனிதர்களை மதத்தாலும், இனத்தாலும் பிரித்து அரசியல் செய்த அரக்கர்களின் பின்னால் நின்ற அத்தனை பேருக்கும் கடைசியில் எஞ்சுவது, தீரா பழிச்சொல்லும், விலகா பெரும் பாவமுமே.

அது நமக்கு உவப்பென்றால், சாவர்க்கருக்கு பாரதரத்னா அளிப்போம். அடுத்து, கோல்வால்கருக்கும். கடைசியாக, கோட்சேவுக்கும்!
https://www.vikatan.com/government-and-politics/politics/why-the-savarkars-ideology-is-dangerous-for-indias-democracy-and-secularism

இளைஞர் நலம் : காய்கறி கடையில் தரமான காய் வாங்குவது எப்படி? - சமூக ஊடகம்

- முருங்கைக்காய் மேலிருந்து கீழ்வரை ஒரே சீராக இருக்க வேண்டும்.
- அவரையில் விதைகள் புடைத்து வெளியே தெரிந்தால், அது முற்றல்.
- வெண்டைக்காய் நுனிப்பகுதி ஒடித்தால் பட்டென்று ஒடிய வேண்டும்.
- கீரை மஞ்சள் பூத்திருந்தால் அருகில்கூட செல்லாதீர்கள். அரைக்கீரை,முளைக்கீரை போன்றவற்றில் தண்டுகள் பெருத்திருந்தால் சுவையாக இருக்காது.
- வெண்மையாகவும், அழுத்தமாகவும் இருந்தால் மட்டுமே காலிஃப்ளவரை வாங்குங்கள். பூத்து விரிந்திருந்தால் சுவை இருக்காது.
- வெங்காயம், வாழைக்காய், மாங்காய் போன்றவற்றை வாங்கும்போது விரல்களால் அழுத்திப் பார்க்கவும். அழுந்தினால் வாங்கக் கூடாது. நூல்கோல், முள்ளங்கி, சுரைக்காய், சௌசௌ, பீர்க்கங்காய் போன்றவை அழுந்தினால் நல்லது என்று பொருள்.
- சிவப்பு நிறத்தில் இருந்தால் மட்டும் அது நல்ல கருணைக்கிழங்கு என்று அர்த்தம். சீக்கிரமாக வெந்து சூப்பர் சுவையாகவும் இருக்கும்.
- நன்றாகப் பழுத்த தக்காளிகளைவிட, பாதி பழுத்த கெட்டியான தக்காளிகளே சுவையானவை.
- வாழைத்தண்டை கிள்ளிப் பாருங்கள். நார் தெரிந்தால் அது முற்றல்,நூல் தெரிந்தால் ஓ.கே!
- சாதம் அல்லது டிபனுக்கு தொட்டுக் கொள்ளத்தான் காய்கறி என்றுநினைக்காதீர்கள். அதுவும் சாப்பாட்டில் மூன்றில் ஒரு பகுதியாக இருக்கவேண்டும். இன்னொரு பகுதி தண்ணீர். மூன்றில் ஒன்றுதான் சாதம் / டிபன்.

- தேங்காய் ஆட்டி பார்த்து உள்ளே நல்லா தண்ணி இருக்குற காயா பார்த்து வாங்கணும்
- முட்டைகோஸ் இலை பிரியாம கொஞ்சம் பச்சை நிறமா இருக்குறதை வாங்கணும்.
- வெங்காயம் வாங்கும்போது, மேற்பாகமும், கீழ்பாகமும் அதிகம் வளராமலும், நீள்வாக்கில் இல்லாமல் உருளையாக இருக்குமாறு பார்த்து வாங்க வேண்டும்.
- கத்திரிக்காய் வாங்கும்போது அழுத்தி பார்த்து கல் போலில்லாமலும், காம்புகள் நீளமாகவும், மேல்தோல் காயைவிட்டு பிரியாமலும் இருக்க வேண்டும்.

நெகிழ்ச்சி : நோயைக் கடந்துவாழும் இறையன்பு - ஜெரோம் லூயிஸ் - இளம் தாய் Kate அவர்களின் அணைப்பில், ஜேமி உயிர் பெற்றதற்கு, அறிவியல் விளக்கங்கள் எதையும், மருத்துவர்களால் தர இயலவில்லை. Kate Ogg என்ற இளம் தாயின் கருவில் வளர்ந்துவந்த இரட்டைக் குழந்தைகள், 6 மாதங்களிலேயே பிறந்துவிட்டனர். அவ்விரு குழந்தைகளில், ‘எமிலி’ என்ற பெயர் கொண்ட பெண் குழந்தை, பிழைத்துவிட்டதாகவும், 'ஜேமி' என்ற பெயர் கொண்ட ஆண் குழந்தை, பிறந்த சில நிமிடங்களில் இறந்துவிட்டதாகவும் மருத்துவர்கள் கூறினர்.



இரட்டைக் குழந்தைகள் ஜேமி, எமிலி ஆகியோருடன், பெற்றோர், கேட், டேவிட் ஜேமியை தன்னிடம் கொண்டுவரும்படி, தாய் Kate மருத்துவர்களிடம் கெஞ்சிக் கேட்டார். அவர் தன் மகனுக்கு இறுதி விடை வழங்க உதவியாக, அக்குழந்தையை அவரிடம் கொடுத்தனர். அக்குழந்தையை தன் மார்போடு அணைத்து, இளம் தாய் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்த வேளையில், அக்குழந்தையிடம் இலேசான அசைவுகள் உருவானதை, தாய் Kate உணர்ந்தார். இறந்த உடலில் இத்தகைய சிறு அசைவுகள் எழுவது சாத்தியம் என்று மருத்துவர்கள் சொன்னபோது, அந்த அன்னை மட்டும், தன் மகன் ஜேமியை இன்னும் இறுக்கமாக தன்னுடன் அணைத்துக்கொண்டார். சில நொடிகள் சென்று, அக்குழந்தையின் கண்கள் திறந்தன. தன் மகன் ஜேமிக்கு பிரியாவிடை வழங்க அந்த அன்னை வழங்கிய அணைப்பு, அவனை இவ்வுலகிற்கு வரவேற்க, அவர் தந்த அணைப்பாக மாறியது. இளம் தாய் Kate அவர்களின் அணைப்பில், ஜேமி உயிர் பெற்றதற்கு, அறிவியல் விளக்கங்கள் எதையும், மருத்துவர்களால் தர இயலவில்லை. தற்போது, எமிலியும், ஜேமியும், 10 வயதுள்ள சிறுமியாக, சிறுவனாக, நலமுடன் வாழ்ந்து வருகின்றனர். மருத்துவத்தால் விளக்கமுடியாத இத்தகைய நிகழ்வுகள், உலகில் ஒவ்வொருநாளும் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. குறிப்பாக, இந்த கோவிட்-19 கொள்ளைநோய் காலத்தில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும், கொள்ளைநோய்களைக் கடந்து, இறைவனின் அன்பு என்றும் நிலைக்கும் என்ற செய்தியை, சுமந்து வந்துள்ளது.

மின்னஞ்சல் ஊடக வழியாக எமது நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு தயவு செய்து தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்புங்கள்.
வாசகர்கள் உவந்தளிக்கும் நன்கொடையே எமது பணிக்கு நிதி ஆதாரம். நன்கொடைகள் அனுப்புவோர் பணவிடை, காசோலை உடனடி பணம் அனுப்பும் வசதியை பயன்படுத்தலாம்.
பெயர் : K. M. Selvaraj
வங்கி : South Indian Bank
நகரம் : Gudalur, The Nilgiris
கணக்கு எண்: 0754053000004800
IFSC / NEFT Code : SIBL0000754

தொடர்புக்கு : K. M. செல்வராஜ், ஆசிரியர், திருஅவை
செய்தி, 7/151A, ஹெல்த்கேம்ப், கூடலூர் - 643 211, நீலகிரி மாவட்டம், தமிழ்நாடு
Cell : 9442541471 email : thiruavaiseithi@gmail.com

ஆண்டவரே, இம்மட்டும் நிகழ்ந்த அனைத்துக்கும் நன்றி.
இனிமேல் நடக்க இருப்பவை அனைத்துக்கும், ஆகட்டும் இறைவா, ஆமென்.
என் ஆண்டவரே, என் தேவனே! உமது அரசு வருக. உமது திருவுளம் நிறைவேறுக.
வாரும் ஆண்டவராகிய ஏசுவே வாரும். ஆமென்.